FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2015

## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | பரதநாட்டியம் - II | 3 மணித்தியாலம் |
|---|---|---|

❖ பகுதி – I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் விரும்பிய மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

1) i) நீர் கற்ற வர்ணத்தின் இராகம் தாளம் நடன அமைப்பு சாகித்தியகர்த்தா போன்றவற்றைக் குறிப்பிடுக.

(4 புள்ளி)

ii) நீர் கற்ற வர்ணத்தின் பல்லவியில் வரும் 2வது தீர்மானத்தையும் முத்தைஸ்வரக் கோர்வை ஒன்றையும் தாள அங்கக் குறியீட்டில் எழுதுக.

(10 புள்ளி)

iii) வர்ணத்தில் வரும் நாயகி, நாயகியின் லக்ஷணத்தை எழுதுக.

(6 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளி)

2) மணிப்புரி நடனத்தினைப் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

i) தோற்றம் வளர்ச்சி ii) இசை, இசைக்கருவி

iii) ஆடல்முறை iv) உடை

(4 x 5 = 20 புள்ளி)

3) i) நாயகன் என்பவர் யார்? (4 புள்ளி)

ii) நால்வகை நாயகர்களையும் குறிப்பிட்டு விளக்குக. (16 புள்ளி)

### பகுதி – II

4) பரதக்கலையின் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தவரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது கலைத்தொண்டினையும் எழுதுக. (20 புள்ளி)

5) சோழர் காலத்தில் நடனக்கலை வளர்ச்சியைக் குறிப்பிடுக. (20 புள்ளி)

6) சிறுகுறிப்பு எழுதுக.

i) ஆச்சியர்குரவை ii) ஏழுவகைத் தாண்டவம்

iii) கோலம் iv) முகவீணை

(4 x 5 = 20 புள்ளி)

7) i) கிராமிய நடனம் என்பதில் இருந்து நீர் விளங்குவது யாது? (4 புள்ளி)

ii) ஒயிலாட்டம், பொம்மலாட்டம், குதிரையாட்டம், காவடி ஆட்டம் ஆகிய கிராமிய நடனங்கள் எச்சந்தர்ப்பத்தில் ஆடப்படுகின்றது? (4 புள்ளி)

iii) மேற்கூறப்பட்ட நடனங்களின் ஆடல்முறை உடை, ஒப்பனை, இசைக்கருவி பற்றிக் குறிப்பிடுக.

(12 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளி)